


ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி. சாலையை கடந்து செல்ல அமைக்கப்பட்டு உள்ள புதிய பாலத்தையும், அதன் வழியாக பொதுமக்கள் வருவதையும் படத்தில் காணலாம்.

### ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் முன்பு

# ஜி.எஸ்.டி. சாலையை கடந்து செல்ல நடைமேம்பாலம்

## எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்

சென்னை, பிப்.5–

ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் முன்பு ஜி.எஸ்.டி சாலையை கடந்து செல்வதற்கு ஏதுவான நடைமேம்பாலத்தை மக்கள் பயன்பாட்டுக்காக முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

### ஜெயலலிதா அறிவிப்பு

மறைந்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா, சட்டசபையில் அவை விதி 110–ன் கீழ் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அந்த அறிவிப்பில், பெருகிவரும் வாகன போக்குவரத்தினால் பல்லாயிரக்கணக்கான பாதசாரிகள் சாலையை பாதுகாப்பாகவும், எளிதாகவும் கடக்க மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பல நடைமேம்பாலங்கள் தேவை என்று கண்டறியப்பட்டு இருப்பதாகவும், ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஆலந்தூரில் நடை மேம்பாலம் ஒன்று அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

### ஆசர்கானா பஸ் நிறுத்தம்

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இரண்டு வழித்தடங்களும் உயர்மட்ட நிலையில் ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் சந்திக்கின்றன. இங்கு ஒரு வழித்தடத்தில் இருந்து மற்றொரு வழித்தடத்திற்கு எளிதாக மாறிச்செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு முன்புறம் உள்ள அதிக போக்குவரத்து மிக்க ஜி.எஸ்.டி சாலையின் எதிர்புறத்தில் உள்ள ஆசர்கானா பஸ் நிறுத்தத்திற்கு பயணிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக சென்றடைவதற்கு ஒரு நடை மேம்பாலம் அவசியமாகும்.

### திறந்து வைத்தார்

அதன்படி ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் முன்புறம் ஜி.எஸ்.டி. சாலையில், இந்த நடை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிதியுதவி வழங்கப்பட்டு, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ள நடைமேம்பாலத்தை முதல்–அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இப்புதிய நடைமேம்பாலம் 55.41 மீட்டர் நீளமும், 6.41 மீட்டர் அகலமும் கொண்டது. மேலும், பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு மின்தூக்கிகள், 4 நகரும் படிக்கட்டுகள், சி.சி.டி.வி. கேமராக்கள், நடைபாதையின் அனைத்து பகுதிகளிலும் எல்.இ.டி. மின்விளக்குகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதையிலிருந்து மின்தூக்கிக்கு செல்வதற்கு ஏதுவாக சாய்தளம் மற்றும் நடைபாதையில் எவர்சில்வர் கைப்பிடிகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ரூ.9 கோடி

ரூ. 9 கோடியே 7 லட்சம் செலவில் இந்த நடைமேம்பாலம் அமைக்கப்பட்டு இருக்கிறது. இதனால் சாலையை கடக்க சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் செல்வதை தவிர்த்து இந்த நடைமேம்பாலத்தை மக்கள் எளிதாக பயன்படுத்திக் கொள்ளலாம். வெளியூரில் இருந்து ஆசர்கானாவிற்கு வரும் மக்கள் நடைமேம்பாலம் முலமாக மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு எளிதில் வர முடியும்.

நடைமேடை திறப்பு விழாவையொட்டி ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே மேடை அமைக்கப்பட்டு இருந்தது. அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட கலெக்டர் சீத்தாலட்சுமி, மெட்ரோ ரெயில்வே நிர்வாக இயக்குனர்கள் சுஜாதா ஜெயராஜ், ராஜீவ் நாராயணன் திவேதி, நரசிம்ம பிரசாத் உள்பட அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

அப்போது பொதுமக்கள் தரப்பில் புவனேஸ்வரி பேசுகையில், 'ஆசர்கானாவில் இருந்து மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு வர 25 நிமிடம் ஆகும். ஆனால் நடைமேம்பாலம் திறந்து வைத்து இருப்பதால் 3 நிமிடத்தில் கடந்துவிட்டேன். இதற்காக முதல்–அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்' என்றார்.